ஷேக்ஸ்பியர் நாடக கதாமஞ்சரி : மலர்-1.

# ஒதெல்லோ டெஸ்டிமோனு

## (OTHELLO, DESDEMONA)

இது

ஷேக்ஸ்பியர் மகாகவியின் நாடகத்தை அனுசரித்து

லாம்ப் என்பவர்

ஆங்கிலத்தில் எழுதியதை


ராவ்ஸாஹிப் - ச. பவானந்தம்பிள்ளையவர்கள்

எப் - ஆர் - எச் - எஸ் (லண்டன்), எம் - ஆர் - ஏ - எஸ் (லண்டன்).


மொழிபெயர்த்தது.


MADRAS :

1913.



Copyright Registered.] [ரிஜிஸ்தர் செய்தது.

PRINTED AT THE VAIJAYANTI PRESS.
(MADRAS TIMES PRINTING & PUBLISHING & CO., LD.)
BY
W. F. GRAHAME ESQ., I. C. S. (RETIRED) AT 32, MOUNT ROAD,

## இக்கதையுள் வந்துள்ள

# பாத்திரங்கள்

---

1. பிரபான்ஷியோ, (Brabantio) ஆலோசனைச் சங்கத்தாரில் ஒருவன்.

2. ஒதெல்லோ, (Othello) வெனிஸ் ராஜாங்க உத்தியோகஸ்தனுயிருந்த ஒரு சிறந்த மௌரியன்.

3. காசியோ, (Cassio) ஒதெல்லோவுக்கு உதவி உத்தியோகஸ்தனுயிருந்தவன்.

4. அயாகோ, (Iago) காசியோவுக்கு முன்னுகவே சேவகத்திலமர்ந்திருந்தவன்,

5. மாண்டானே, (Montano) ஸைப்ரஸ் தீவின் அரசாங்கத்தாரிடத்தில் ஒதெல்லோவுக்கு முன் அவன் உத்தியோகத்தை வகித்திருந்தவன்.

6. டெஸ்டிமோனு, (Desdemona) பிரபான்ஷியோவின் குமாரத்தி; ஒதெல்லோவின் மனைவி.

7. எமிலியா, (Emilia) அயாகோவின் மனைவி.

---

# ஒதெல்லோ டெஸ்டிமோனு

## இவர்களுடைய கதை

ஐரோப்பாக் கண்டத்திலே, இட்டலி (Italy) தேசத்திற் பிரதான பட்டணமாகிய வேனிஸ் (Venice) நகரத்தில், ப்ரபான்ஷியோ (Brabantio) என்பவர் மிகவும் பணக்காரர்; இராஜாங்க ஆலோசனைச் சபையிலொருவர். இவருக்கொரு மகள்,

குலத்தாலென்? அழகாலென்?
குணங்களே பெருஞ்செல்வம்;

என்றபடி சகல நற்குணங்களும் நிறைந்து, பேரழகியாய் விளங்கியிருந்தனள். இவள் பெயர் மெல்லிய டெஸ்டிமோனு (Desdemona) இவளுடையகுணத்தையும் அழகையும் வியந்து இவளை மணம்புரிய பலரும் விரும்பிக் கேட்டார்கள். ஆனால் தன்னைப்போல வெள்ளிய நிறமும் செவ்விய குலமும் பொருந்திய சுதேசிகளில் ஒருவர்மீதும் இவளுக்குக் காதல் உண்டாகவில்லை.

"கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்" என்றபடியும்,

"மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி யினத்தானும்
இன்னா னெனப்படுஞ் சொல்" என்றபடியும்

முகத்தழகைவிட அகத்தழகே மேலானதென்று எண்ணியிருந்த இம்மங்கை, ஒரு கரிய மௌரியன் (Moor) மேற் காதல் கொண்டனள்; இவன், இவள் தந்தைக்கு மிகவும் பிரியமுள்ளவன்; இவனை, அவர் அடிக்கடித் தமது வீட்டுக் கழைத்து வருவது வழக்கம்.

தனதழகுக்குத் தகாதவனாகிய இவனைக் காதலித்ததற்காக, டெஸ்டிமோனாவைக் குற்றங்கூற நியாயம் இல்லாதிருந்தது. இவளுடைய காதலனும் ஒதெல்லோ (Othello) என்னும் பெயருடையவனுமாகிய இந்த மௌரியன், நிறத்திற் கரியன் என்பது ஒன்றே தவிர மற்றப்படி, கற்பிற்சிறந்த கன்னிகையுந், தன்னைக் காதலிக்கச்செய்யும் குணங்களிற் குறைந்தவனல்லன். இவன் யுத்தவீரன்; மெத்ததீரன்; துருக்கியரோடு போர்புரிந்த திறமையினால், வேனிஸ் இராஜாங்கத்தில் பிரதம சேனாதிபதியாய், அவ்விராஜாங்கத்தாருடைய நன்குமதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தான்.

அவன் பல தேச யாத்திரை செய்தவன்; ஆகையால், பெண்களுக்குள்ள வழக்கம்போல, டெஸ்டிமோனா அவன் கண்டுவந்த புதுமைகளையெல்லாம் தனக்குச் கூறும்படிக் கேட்பாள். தனக்கு ஞாபகம் இருந்தவரை

யில், தான்செய்த யுத்தங்களையும், அடக்கின கலகங்களையும், சுற்றிவளைத்த முற்றுகைகளையும், நிலத்தின் மீதும் ஜலத்தின்மீதும் தனக்கு நேரிட்ட அபாயங்களையும், அவைகளினின்றும் தான் தப்பின உபாயங்களையும், கோட்டை மதில்களை யிடித்து உள்ளே நுழைந்தபோதும், பீரங்கியின் வாய்க்கு நேரிற் சென்றபோதும், தான் பலமுறை மயிரளவிற் றப்பிப் பிழைத்ததையும், செருக்குற்ற பகைவர்கையில் தான் சிக்குண்டபோது, அவர்கள் தன்னைப் பருந்தாட்டமாட்டி, அடிமையாக்கி விற்றுவிட்டதையும், அப்படி அடிமையான காலத்தில், தான் அடங்கியிருந்து, பிறகு சமயம் பார்த்துத் தப்பி ஓடியதையும் விளங்கவுரைப்பான். இன்னும், அவன் அந்நிய தேசங்களிற்கண்ட விஸ்தாரமான வனாந்தரங்களையும், விசித்திரமான குகைகளையும், பருத்த பாறைகளையும், கற்சுரங்கங்களையும், வானுறவோங்கிய மலைகளையும், நாகரிகமற்ற ஜனங்களையும், நரமாமிசம் உண்ணும் நரர்களையும், தோளின்கீழ்த் தலையுள்ள ஆப்ரிகா (Affica) கண்டவாசிகளையும்பற்றி வர்ணித்துக் கூறுவான். இந்த யாத்திரைக்கதைகள் டெஸ்டிமோனாவின் உள்ளத்தையும் உணர்வையும் கவர்ந்திருந்தன. ஆதலால் இவள் வீட்டுவேலை ஏதாவது செய்யவேண்டியிருந்த காலத்திலும் அதனை அதிகவிரைவிற் செய்துமுடித்து

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" போலல்லாமல், கேள்வியில் விருப்பமுடையவளாத

லால் ஒதேல்லோவின் இன்னுரையமுதத்தை தனது செவிவாயிற் பருகுவதற்குப் பேராசையோடு திரும்பி வருவாள். தனது மனம் இளகி, இக் கதைகளில் லகித் திருந்த சமயத்தில், ஒருநாள் டெஸ்டிமோனு இவனை நோக்கி, "அங்கு சிறிதும் இங்கு சிறிதுமாகக் கூறி வந்த உமது கதையை ஆதியோடந்தமாய் விரித்துரைக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள்.

இவ்வாறு "மாதர்க்கிதம்" என்றபடி இவன், தனது இதவசனங்களால் டெஸ்டிமோனுவைத் தன் வசப்படுத்தி, அவள் வேண்டுகோளுக்கிரங்கித் தனது கதை முழுவதையும் சொல்லுவானுயினுன். இவனுக்கு இளமையில் நேரிட்ட இடும்பைகளைக் கேட்டபொழுது அவள்,

"அன்பிற்கு முண்டோ அடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்றபடி கண்ணீராருய்ப் பெருக்கினுள்.

இவன் சொல்லிய கதையை செவியாரக்கேட்ட டெஸ்டிமோனு, மனமுருகி அவன் பட்ட கஷ்டங்களுக்காகப் பரிதாபமுற்று, அவைகளை நினைந்து நினைந்து நெடுமூச்செறிந்தாள்; "ஆஹா! இச்சரித்திரம் எத்தனை அதிசயமானது, எத்தனை உருக்கமானது; கன்னெஞ்சையும் கரைத்துப் பரிதபிக்கச் செய்கிறதே" என்று வற்புறுத்திக் கூறினுள். இன்னும், அவள், "ஐயோ! இதை ஏனே கேட்டேன்; கடவுள் இப்

பேர்ப்பட்ட புருஷனையல்லவோ நமக்கு ஏற்படுத்தவேண்டும்?" என்று எண்ணிக்கொண்டாள்; அவனைப் பலமுறை வந்தித்தாள்; அவள் அவனைநோக்கி "என்னைப் பெறும்படி, உமது நண்பரில் யாருக்காவது விருப்பமிருந்தால், அவர், உமது கதையைச் சொன்னுற் போதும் என்று தெரிவியுங்கள்; அவர் அங்ஙனஞ்செய்வாராயின், நான் அவர் வசப்படுவது நிச்சயம்" என்றுள். இங்ஙனம் கேட்டோர் மனதை மயக்கி மருளவைக்குமாறு, பட்டதும் படாததுமாக, நாணமேற்கொண்டு குறிப்பிற்கூறிய அவளுடைய அமுதமொழிகளின் உட்பொருளை ஒதெல்லோ உணர்ந்தான்; உணர்ந்து, அவ்வரிய சமயத்தை அகலவிடாமல்

"அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்"

என்றபடி தனக்கு அவள்மேலுள்ள காதலை எடுத்தோதி, அப்போதே அவள், தன்னை ரகசியமாய் மணந்துகொள்ளும்படி அவளுடைய சம்மதியையும் பெற்றுன்.

ஒதெல்லோவை, நிறத்தாலும் செல்வத்தாலும், ப்ரபான்ஷியோ தன்னுடைய மருகனுக ஏற்றுக்கொள்ள ஒவ்வான். அவன் தனது மகளை, அவளிஷ்டம்போல விட்டு, வேனிஸ் நகரத்து உயர்குலப் பெண்கள் வழக்கப்படியே, இராஜாங்க ஆலோசனை சபையின் அங்கத்தினருள் ஒருவனை அல்லது அந்த நிலைக்கு வரக்கூடிய

ஒருவனை அவள் வரிப்பாள் என்றெண்ணியிருந்தான். ஆனால் அவன் எண்ணம் ஈடேறவில்லை. கரிய மௌரியனையே டெஸ்டிமோனு காதலித்தாள்; அவனுடைய வீரதீரச் செயல்களை வியந்து அவள் தனது உடல் பொருள் ஆவி மூன்றையும் அவனுக்கே தத்தஞ் செய்தாள். தன் மனத்திற்கிசைந்த மணவாளனாக மதித்துத் தெரிந்தெடுத்த அவனிடத்தில் அவளுக்கு மனம் பற்றிப் பூரண பக்தியுண்டாய் விட்டது; பகுத்தறியும் புத்தி சாதுரியமுள்ள இவளையன்றி மற்ற எல்லாருக்கும் கொஞ்சமும் பிடிக்காத அவனது கரிய நிறமே, தன்னை விவாகம் புரியவந்த வெனிஸ் நகரத்துப் பிரபுகுல புத்திரர்களுடைய வெண்மை நிறத்தினும் ஒண்மை முகங்களினும் சிறந்ததாக இவளுக்குத் தோற்றியது.

இந்த அந்தரங்கக் கூட்டுறவு, நெடுநாள் இரகசியமாகவே இருந்துவிடாமல், கிழவராகிய ப்ரபான்ஷியோ அறிந்துகொள்ளும்படி பகிரங்கமாயிற்று. உடனே, அக்கிழவர், இராஜாங்க ஆலோசனைச் சபைக்கு முன் சென்று "இந்த மௌரியனாகிய ஒதெல்லோ எனதுவீட்டுக்குப் பலமுறை விருந்தாளியாய் வந்து, உண்டதை நினையாமல், உண்டவீட்டுக் கிரண்டகஞ்செய்தபடி, என் சம்மதமின்றி மணிமந்திர ஔஷதப் பிரயோகங்களால் வடிவழகியாகிய எனது மகள் டெஸ்டிமோனுவைத் தன்வசப்படுத்தி, அவள் தன்னை மணக்கும்படி செய்துகொண்டனன்" என்று முறையிட்டார்.

இந்தச் சமயத்தில், வேனிஸ் இராஜாங்கத்தார்க்கு ஒதேல்லோவின் யுத்தமுயற்சி, இன்றியமையாத தாயிற்று. துருக்கியர் ஒருபெரிய கப்பற்சேனையைச் சித்தஞ் செய்து, ஸைப்ரஸ்தீவைப் (Cyprus) பிடித்துக்கொள்ளும்படி அனுப்பியிருந்தார்களென்ற வர்த்தமானம் வேனிஸ் இராஜாங்கத்தார்க்கு எட்டியது; தமது வசத்திலிருந்த அந்தத்தீவு, கோட்டை கொத்தளங்களால் பலப்பட்டு விளங்கியிருந்தது. ஆகையால் அதனைத் துருக்கியர் பிடித்துக் கொள்ளாமற் காக்க வல்லவன் ஒதேல்லோவே எனத் தீர்மானித்த அவ்விராஜாங்கத்தார், அவனைக் கவனித்துத் தமது ஆலோசனைச் சபைக்கு முன்னிலையில் வரவழைத்தார்கள். அவன், தான் செய்திருந்த குற்றத்தினிமித்தம், அந்தவூர் வழக்கப்படி, மரணதண்டனை பெறவேண்டியவனு யிருந்தபடியால், குற்றவாளியாகவும், இராஜாங்க யுத்தமுயற்சிச் சேவையில் உயர்தர வுத்தியோகம் பெறவேண்டியவனுகவும் சபையார் முன்னே வந்துநின்ருன்.

வயதிலும் இராஜாங்காலோசனை அனுபவத்திலும் முதிர்ந்த கிழவராகிய ப்ரபான்ஷியோவினுடைய கூற்றை, அச்சபையார் பொறுமையுடன் கேட்டார்கள். ஆனல் பெண்ணைப்பெற்று வளர்த்த தந்தையாகிய அவர்க்குக் கோபமுண்டானதால், அனுமானங்களையும் அவதூறுவார்த்தைகளையுங் காரணங்களாகச் சொல்லி வாதித்துக் குற்றஞ் சுமத்த முயன்ருர். சபையார்,

ஒதெல்லோவை நோக்கி 'உனது நியாயத்தை உள்ள படி உரை' எனக்கேட்டார்கள். அவன், தனக்கும் டெஸ்டிமோனாவுக்கும் உண்டான காதற்கதையை,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்றபடி சிறிதும் ஒளிக்காமல், நடந்தது நடந்தபடி பின்வருமாறு கூறுவானாயினன் :

"கல்வியில் அறிவில் கவுரவந் தன்னில்
மிக்கு விளங்கும் மேலதி காரிகாள்!
என்றனக் குகந்த எழில்மிகு தலைவர்காள்!
இந்தக் கிழவர் மகளை யென்வசப்
படுத்தின துண்மை; பகருவ துண்மை;
உண்மையே அன்றிவே றுரைக்கப் படுமோ?
அவளை,
மணந்தது முண்டு மறைவில் அடியேன்;
இதுவே எனது குற்றம்; இதற்குமேல்
வேறிலை என்று விளம்பலாமே;
வெட்டெனப் பேசும் விவேக முடையேன்;
இனிமை யென்ப தின்னதென் றறியேன்;
சென்ற ஒன்பது திங்கள் தவிர
ஆறுட னொன்றுசேர் ஆண்டுக ளாக
இந்தத் தோள்கள் எய்திய வன்மை
படுகள மதனிற் பயின்ற போர்களால்
விளக்க மாயின; அளக்கரு மேன்மையில்

ஆண்மையிற் சிறந்த ஐயன் மீரே!
உலக ஞான மொன்று மில்லேன்;
போர்முக மறிவேன்; ஊர்முக மறியேன்;
சண்டை யறிவேன்; விதண்டை யறியேன்;
'மெய்புடை பொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே'
என்ற பழமொழி என்பாற் பலிக்கும்
எனநான் அஞ்சுவல்; இன்மொழி யதனால்
எனாது குற்றத்திற் கெய்திய புரைதீர்
காரண முழுவதுங் கழறும் வலியிலேன்:
ஆயினும் உமாது தூயதண் ணருளால்
உள்ளன உள்ளவா உரைக்குவல் கேண்மோ
காதற் பெருக்கைக் கழறக்கேண்மோ!
மருந்து மறியேன்; மணியு மறியேன்;
மந்திர மறியேன்; தந்திர மறியேன்;
வித்தை யறியேன்; விவேக மறியேன்;
சூனிய மறியேன்; சுத்த மனத்தேன்;
எந்த விதத்தில் எனக்கிவர் குமரி
வந்தன ளென்ன வகுப்பன் கேண்மோ.
அவள்தன்,
தந்தையா மிவரெனைச் சந்ததம் விரும்பி
நட்டனர்; அதனால் நயந்து பன்முறை
அழைத்து விருந்தெனக் களித்துக் களித்தனர்;
எனாது போர்முகத் தெய்திய வரலா

றனைத்தையும் வினவினர்; ஆண்டாண் டாக
அடியேன் நடத்திய அமர்களிற் போர்களில்
எய்திய அதிஷ்டம் அனைத்தையுங் கேட்டனர்.
அதனால்,
இளமை யென்னும் வளமைசேர் நாண்முதல்
அன்றவர் கேட்ட வரையிலும் அடியேன்
படுதுயர் அனைத்தும் பகர்ந்தனன் சடுதியில்;
நேர்ந்த துன்பமும், நீரினால் நெருப்பால்
மயிர்க்கடை அளவில் உயிர்க்கிடை யூறு
தப்பின தன்மையும், கப்பின அகந்தை
மருவிய பகைவர் உருவிய கத்தியோ
டென்னைக் கொடுபோய் இழுக்குடை அடிமையாய்
விற்ற திறமும், விவேகமா யாங்கிருந்
தடியேன் தப்பி யகன்ற விதமும்,
ஆகுமென்,
யாத்திரை காலச் சூத்திர மெல்லாம்
விடாது கூறினன்; விவேகிகாள்! இன்னும்
விளம்புவல் கேளீர்; உளமகிழ்ந் தடியேன்
இவைகளை யெல்லாம் இறையள வேனும்
விடாது கேட்க விரைந்தனள் இவர்மகள்
டெஸ்டி மோனாத் தேன்மொழி மடவரல்;
இடையூ றாக இற்பணி யவளைப்
பிரித்த தாயினும் பெரிதும் விரைந்தப்
பணிதனை முற்றிப் பரிந்துவந் தெனது

கதையைக் கேட்டுக் களிப்புற் றனளால்:

அவள்தன்,
செவியே வாயாச் சிறந்தவென் கதையாம்
அமுத மார்ந்தன ளகமகிழ்ந் தாளென
உணர்ந்தனன் அவளே ஒருநாள் என்னை
உமாது கதைகளை ஒன்றாய்த் திரட்டி
விரிப்பீ ரென்ன வேண்டவும் பெற்றேன்.

அதாஅன்று,
இத்தனை நாள்நீர் இயம்பிய நுங்கதை
அரை குறையாக அறிந்தனன்; அதனைக்
கவனஞ் செலுத்திக் கருத்தி விருத்த
முழுமையும் மறுமுறை மொழிவீர், அடியேன்
காதலுற் றனனெனக் கழறவும் பெற்றேன்.

அதனால்,
இன்னு மொருமுறை என்கதை இயம்ப
ஒருப்பட் டடியேன் உரைசெய் காலையில்,
இளமையி லென்றனக் கெய்திய இடும்பைகள்
தம்மை யுணர்ந்தத் தையல் வருந்திக்
கண்ணீர் சொரியக் கண்டனன்; எனாது
கதைமுடி வடைந்தபின் கஷ்டத்திற் கீடா
நெடுமூச் செறிந்தனள் நிச்சய மான
விசுவா சத்துடன் விளங்கினள்; எத்தனை
அற்புதம்! எத்தனை அதிசயம்! எத்தனை
பச்சாத் தாபம்! என்று பகர்ந்தனள் ;

ஏனோ இதைநான் கேட்டனன்? என்றனள்;
கேளா திருக்கவுங் கில்லே னென்றனள்;
கடவு ளித்தகை காளையை எனக்குப்
படைத்திருக் காரோ எனவும் பகர்ந்தனள்:
என்னை யன்பாய் இறைஞ்சினள்: எனக்கு
நண்ப னவளை நயந்தவ னுளனெனின்
எனது சரிதையை எங்ஙனம் சொல்வதென்
றவற்குக் கற்றுக் கொடுத்தனுப் பினனேல்
அதுவே சாலும் அவளைப் பெறுவதற்
கென்றனள்: கேட்டேன் இதன்குறிப் புணர்ந்தேன்;
நான்படும் பாட்டை நயந்தவள் என்னைக்
காதலித் தனளவள் கழிபே ரிரக்கம்
என்மேற் கொண்டதற் கியானும்
அவளை விரும்பினேன் ஐயன் மீரே"

இவ்வாறு அவன், தனது காதற் கதையைத், தாராளமாகவும் கேட்டோர் அனைவரும் உண்மையென்று நம்பத் தகுந்த அத்தனை பெருந்தன்மை யாகவும் கூறக் கேட்ட பிரதம நீதியதிபர், "இத்தனை உருக்க மாகச் சொன்ன இக்கதை, எனது மகளையும் தன்வசப்படுத்தி யிருக்கும்" என்று தமது எண்ணத்தை ஒளிக்காமல் வெளியிட்டார். இதனால் ஒதெல்லோ அப்பெண்ணோடு சகவாசஞ் செய்தபோது, அவள்மேற் பிரயோகித்த மந்திர தந்திர ஜாலங்கள், காதலர்க்குள் நிகழும் சாதாரண வார்த்தைகள்தவிர வேறல்ல வென்றும், அவன்

அவளுக்கு வைத்த சூனியமெல்லாம், நங்கையர்க்குக் கர்ணாமிர்தமாகக் கதைசொல்லுந் திறமையே என்றும் வெளிப்படையாய் விளங்கிற்று.

பிறகு, டேஸ்டிமோனுவின் சாக்ஷியத்தினுல், ஒதெல்லோவின் வாக்குமூலம் நிலைத்தது. அவள் நியாயஸ்தலத்தில்தோன்றி,

"பெற்று வளர்த்தெனைப் பிரியமாய்க் கல்வி
பயிற்றிய தந்தை தனக்குப் பன்முறை
கடமைப் பட்டனன்; கல்வியும் அறிவும்
எங்ஙனம் எந்தையைப் போற்றுவ தென்பதை
எனக்கறி விப்பன எனினும், என்தாய்
எவ்வா றொருதன் தந்தையின் ஏற்றமாய்
இவரை மதித்தனள், அங்ஙனம் எனது
நாயகர் நாத ராகிய துருக்கர்
ஒதெல்லோவுக் குடல்பொரு ளாவியாற்
கடமைப் பட்டனன் கற்றறிந் தோரே"

"என்னைப்பெற்று வளர்த்துக் கல்வி பயிற்றியதற்காக எனது தந்தைக்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்; எனது கல்வியறிவால் நான்அதை அறிந்திருக்கின்றேன். ஆனுல் எனது தாய், தனது தந்தையைக்காட்டிலும் கணவராகிய இவரை (ப்ரபான்ஷியோவை) எப்படி உயர்வாக மதித்திருந்தனளோ, அங்ஙனமே நானும் எனது நாதரும் நாயகருமாகிய இவர்க்கு (ஒதெல்லோவைக்காட்டி) கடமைபட்டிருக்கின்றேன்" என்று கூறினுள்.

கிழவர், தமது கட்சியைச் சாதிக்கமுடியாதவராய், பலவாறு விசனப்பட்டு மௌரியனை அருகில் வரவழைத்து, வேறு விதியின்றித் தமது மகளை அவனுக்கு தத்தஞ்செய்து "இப்பெண்ணை உனக்குக் கொடாமலிருக்கும் சுதந்தரம் இன்னும் எனக்குண்டாயிருக்குமாகில், என் மனப்பூர்வமாய் அவளை உன்னைவிட்டுப் பிரித்துவைத்திருப்பேன். எனக்கு வேறு மக்களின்மைக்கு மகிழ்கின்றேன். ஏனெனில், இந்த டேஸ்டிமோனுவின் நடத்தை என்னைக் கொடும்பாபியாக்கி, அம்மக்களும் இவளைப்போலவே என்னைவிட்டுப் பிரியாமலிருக்கும்படி, மரக்கட்டையைக் கட்டித் தொங்கவிடத் தூண்டியிருக்கும்.

இந்த கஷ்டநிவிவர்த்தி யானவுடனே, ஒதெல்லோ தனக்கு நேரிடும் போர்த்தொழில் ஜீவியதுன்பங்கள், மாந்தர்க்கு இன்றியமையாதனவாகிய ஆகாராதிகள் போலச் சாதாரணமாயிருந்தபடியால், ஸைப்ரஸ் தீவில் யுத்த முயற்சியின் அதிகார ஸ்தானத்தை ஆக்ஷேபனையின்றி ஒப்புக்கொண்டான். டேஸ்டிமோனுவும், புது வதூவரர்கள் வழக்கமாய் நுகரவேண்டிய சிற்றின்பங்களிற் காலம் போக்குவதிலும், தனது பிராணநாதனுடைய கௌரவம் அபாயமானதானலும், அதில் அதிக மதிப்புடையவளாய், அவன் அங்ஙனஞ் செல்லச் சம்மதித்தனள்.

ஒதெல்லோவும் அவனது நாயகியும் ஸைப்ரஸ் துறையில் இழிந்தவுடனே, "ஒரு பெருங் கடும் புய

லால் துருக்கியச் சண்டைக் கப்பல்கள் சிதறுண்டு சென்றன. ஆகலின், உடனே ஸைப்ரஸ் தீவைப் பகைவர் தாக்கும் பயம் இல்லை" என்று சமாசாரம் எட்டியது. ஆனாலும், ஒதெல்லோவுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் மற்றொரு யுத்தம் ஆரம்பமாயிற்று; அவனுடைய குற்றமற்றநாயகியின் விஷயத்திற் கெடுநினைப்புக்கொண்ட சில பகைவர், காரணமின்றியே அந்நியநாட்டுத் துரோகிகளினும் அதிக கெடுதி விளைக்கலானார்கள். பிரதம சேனாதிபதியாகிய ஒதெல்லோவின் நண்பருக்குள் காசியோவைக் காட்டிலும் அதிக நம்பிக்கையுள்ளவன் எவனும்இல்லை. மைக்கல் காசியோ (Michael Cassio) என்பவன் வாலிபன், காதற்பெருக்குடையவன், நயமொழியாளன்.

"ஏந்தெழின் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் * * *" என்றபடி, இந்த குணங்களெல்லாம் பெண்களுக்குப் பிரியமானவைகளல்லவா? அன்றியும் அவன் இயற்கை அழகன்; சமயோசிதமாய்ப் பேசுந்திறமுடையவன்; ஒதெல்லோவைப் போல வயது சென்ற பிறகு அழகிய யவ்வன ஸ்திரீயைக் கலியாணஞ் செய்துகொண்டவர்கட்குச் சந்தேக மனத்தை உண்டுபண்ணக்கூடிய குணங்களெல்லாம் அவனிடத்தில் இருந்தன. ஒதெல்லோ, சந்தேகம் என்பது இன்னதென்றுணராத பெருமிதகுணம்

வாய்ந்தவன்; பிறர் இழிதொழில் செய்வரெனச் சந்தேகிக்காதவன்; டெஸ்டிமோனாவிடத்தில் தான் கொண்ட காதற் காரியங்களை நிர்வகிப்பவனாக இந்தக் காஸியோவை ஏற்படுத்தியிருந்தான்; இவனே அந்த விவாக நிச்சயத்தில் மத்தியஸ்தனாக இருந்தவன். ஒதெல்லோ தனக்கு ஸ்திரீகள் மனமகிழப் பேசுந்திறம் இல்லையென அஞ்சி, அடிக்கடிக் காசியோவைத் தனக்குமாறாக டெஸ்டிமோனா விடத்தில் அனுப்பி வருவானாயினன்; இத்தகைய களங்கமற்றகுணம், வீரனாகிய ஒதெல்லோவுக்குப் பெருமையேயன்றி வேறல்ல. இதனால், ஒரு கற்புடைய ஸ்திரீ, தனதுபுருஷனுக்கு இரண்டாவதாக வேறு புருஷனிடத்தில் எவ்வளவு அன்பும் நம்பிக்கையும் வைக்கலாமோ அவ்வளவு அன்பையும் நம்பிக்கையையும் உத்தமியாகிய டெஸ்டிமோனா, காஸியோவிடத்தில் வைத்திருந்தாள். விவாகம் நிறைவேறின பிறகும் வதூவரர்கள் இருவரும் காஸியோ விடத்தில் முன் போலவே அன்புவைத்திருந்தார்கள். அவன், அவர்கள் வாழ்மனைக்கு அடிக்கடிச் செல்லுவான்; களங்கமின்றி களகளவென்று பேசுவான்; அங்ஙனம் பேசத் தெரியாத ஒதெல்லோவுக்கு அது, அதிக மனக்கிளர்ச்சியுண்டுபண்ணும்; களங்கமற்றுச் சிரித்துப் பேசத் தெரியாதவர்கள், அங்ஙனம் பேசுபவர்கள் பேச்சைக்கேட்டு மகிழ்வது வழக்கந்தானே! டெஸ்டிமோனா தனது கலியாணத்திற்கு முந்தி எங்ஙனம் காஸியோ விடத்திற்

கலந்துறவாடிப் பேசிக்களித்திருந்தனளோ அங்ஙனமே இப்போதும் இருப்பாளாயினள்.

ஒதேல்லோ, சில நாளைக்கு முந்திக் காஸியோவை உதவிசேனுதிபதி (Lieutenant) வேலைக்கு உயர்த்தியிருந்தான். இந்த உத்தியோக பதவி, பிரதம சேனுதிபதிக்கு அடுத்த நிலையில் அவருடைய நம்பிக்கைக்கு ஆஸ்பதமாய்இருந்தது. இந்த உயர்ச்சி, அயாகோ(Iago) என்பவனுக்குப் பொறுமை விளைத்தது. இவன் அநேக நாளாய்ச் சேவகத்தில் இருந்தவன். ஆதலால் காஸியோவைக் காட்டிலும் தனக்கு அதிக ஸ்வாதீனம் இருந்ததென்றெண்ணி அடிக்கடிக் காஸியோவைப் பின் வருகிறபடி நிந்திப்பானுயினன்: "நீ பெண்கள் கூட்டத்திற்கே சரியானவன்; யுத்தஞ் செய்யும் முறைமையும் அதனிற் சேனையை அணிவகுக்குந் திறமையும் ஒரு சிறுமிக்கெவ்வளவு தெரியுமோ அவ்வளவே நீயும் அறிவை." அயாகோ, காஸியோவை வெறுத்ததன்றி ஒதேல்லோவையும் விரும்பவில்லை. அவன், ஒதேல்லோவை வெறுத்தற்கு இரண்டு விதக்காரணங்கள் இருந்தன. அவன் காஸியோவுக்கு உதவிசேனுதிபதி வேலைகொடுத்தது ஒன்று; துருக்கனுகிய அவன் அயாகோவின் மனைவி எமிலியா (Emilia) வின்மேல்அதிக விருப்பமாயிருந்தான் என்று அயாகோ அநுமானித்திருந்தது மற்றென்று. இவ்விதப் போலிக் காரணங்களால் கோபங்கொண்ட அயாகோ, இயற்கை

யாகவே குயுக்திகளிற் றேர்ந்தவனுதலால், மௌரிய னுகிய காஸியோ டேஸ்டிமோனு இருவரையும் ஒருங்கே அழித்துப் பழிவாங்க ஒரு பயங்கரமான யுக்தி செய்தான்.

அயாகோ வஞ்சகன்; மானுடர் இயற்கையை நன்கு ய்க்கற்றுணர்ந்தவன்; மனிதன் மனதைப் புண்படுத்தக் கூடிய எல்லாவிதத் துயரங்களினும், அவனுடைய தேகத்தை வருத்தக்கூடிய எல்லாவித நோய்களினும், தன் மனைவியின் கற்பில் சந்தேகப்படுவதால் உண்டாகும் துன்பம் சகித்தற் கரியதென்றும், அது ஆறுத் துயர் தருவ தென்றும் அறிந்திருந்தான்; ஒதேல்லோவைக் காஸியோவிடத்திற் சந்தேகம் கொள்ளும்படி, தான் செய்யக் கூடுமானுல், அது, தனது பழிவாங்கு மாலோசனைக் கேற்றதாகுமென்றும், காஸியோ ஒதேல்லோ ஆகிய இவ்விருவர் அல்லது இவ்விருவரில் ஒருவர் இறந்துபடுவதற்கு முகாந்தரமாகும் என்றும் அவன் எண்ணினுன்.

பிரதம சேனுதிபதி தமது மனைவியுடன் ஸைப்ரஸ் தீவிற்கு வந்து, பகைவர் படைக்கப்பல்கள் சிதறுண்டு போன சமாசாரம் கேட்ட நாள், அந்தத் தீவில் ஒய்வு நாளாய்க் கொண்டாடப்பட்டது. ஒவ்வொருவரும், விருந்திலும் வேடிக்கையிலும் களியாட்டிலும் உண்டாட்டிலும் காலங்கழித்தார்கள். திராட்ச ரஸம் (Wine) ஏராளமாய்க் கையாளப்பட்டது; திராட்ச

ரஸ பான பாத்திரங்கள் ஒருவர் மாறி ஒருவரிடத்திற் போய்க்கொண்டே யிருந்தன. அதனைக் குடித்தவர் ஒவ்வொருவரும் கருமையாகிய ஒதெல்லோவையும் அருமையாகிய டெஸ்டிமோனுவென்னும் அவனுடைய நாயகியையும் பல்லாண்டு கூறி வாழ்த்தினர்கள்.

அந்நாளிரவில், படை காவலர்க்குத் தலைவனாக, காஸியோவை நியமித்து, ஒதெல்லோ, "இப்படையி லுள்ள, போர்ச்சேவகர்கள் அதிகமாய்க் குடித்து வெறித்துத் தாறுமாறுய்த் திரிவார்களாயின், இத்தீ விற் குடிகள் பயப்படுவார்கள்; புதிதாய் வந்த சேனை பொல்லாததென்று வெறுப்பார்கள். ஆகையால் அவர் கள் அங்ஙனம் செய்யாமல், நீ ஜாக்கிரதையாய்ப் பார்த் துக்கொள்" என்று திட்டஞ் செய்தான். அயாகோ, தான் முந்தியே ஆலோசித் திருந்தபடி, அன்றிராத் திரி, தனது தீவினையைச் செய்யத் தொடங்கினன். தனது பிரதம சேனுதிபதியிடத்தில் அன்பும் நன்றி யும் கொண்டவன்போல் வெளி வேடத்தால் நடித்த அயாகோ, அதிகமாய்க் குடித்துக் களிக்கும்படி காஸி யோவிற்குப் போதித்து அவனை மயக்கினன். படை காவலர்த்தலைவன் அங்ஙனஞ் செய்தல், மிகவும் அநு சிதம் மென்றெண்ணப்படும்; ஆகையால் சிறிதுபோது காஸியோ, அதற்கு, உடன்படாமல் மறுத்தான். ஆனு லும் புலி பசுத்தோல் போர்த்துக் கொண்டிருப்பது போலத் தனது கள்ளவுள்ளத்தை மறைத்துக் கலந்து

உறவாடும் அயாகோவின் மாய்மால வார்த்தைகளிற் கடைசியாக காஸியோ மயங்கிக் கிண்ணங்கிண்ணமாய்க் குடித்துக்கொண்டே யிருந்தான். அயாகோவும் குடிக் கனுகூலமான பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அவனுக் குக் கிண்ணங் கிண்ணமாய்க் கொடுத்துக் கொண்டே யிருந்தான்; காஸியோ, டேஸ்டிமோனுவைப் பல வாறு புகழ்ந்து பேசினன்.

நங்கை டேஸ்டிமோனுவே நல்லவளென் றுனவளென்
தங்கையினு மன்புடையாள் தானென்றுன்-மங்கையவள்
நோயின்றி வாழ்கவொரு நூற்றுண்டென் றேகுடித்தா
ஓய்வின்றித் தீய ஒயின் [ன்

டேஸ்டிமோனு பெருமாட்டி உத்தமி! எனக்குத் தங்கையினும் அன்புடையாள், அவள் நோயின்றி நெடு நாள் வாழ்கவென்று காஸியோ, மேலுமேலும் ஒயின் குடித்தபடியே யிருந்தான். இப்படியவன் வாய் வழி யாய் நுழைந்த சாராயம் என்னும் சத்துரு அவன் அறி வைக் கொள்ளைகொண்டதால் அவன் மதிமயங்கியிருந் தான்.

"துஞ்சினர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்."

"விண்சுழன்று கீழே விழுகின்ற தென்பாரிம்
மண்சுழன்று மேலேவு மென்பார் - கண்சுழன்று
சூரியனைச் சோமனென்பார் சொல்விளம்பி செய்கின்ற
காரியத்தை யாருரைப்பார் கண்டு."

என்ற செய்யுட்கள் இங்கே கவனிக்கத்தக்கன. இந்தச்

சமயத்தில், அயாகோ இரகசியமாய் ஏவின ஒருவன் காஸியோவுக்குக் கோபமூளும்படி சில கடுஞ்சொற்களைப் பேசினன். உடனே அவனும் இவனும் கத்தியுருவிச் சண்டை செய்தார்கள். இடையில் நுழைந்து தடுத்த மோண்டானோ (Montano) என்னும் உயர்தர உத்தியோகஸ்தனுக்குக் காயம்பட்டது: சண்டை பலத்தது. கலகத்துக்கு முதலாளியாயிருந்த அயாகோ, அதுதான் நல்ல சமயமென்று, அதனை ஒரு பெருங் குழப்பமாக்கி எங்கும் பரவ வைத்தான்; கோட்டை மணியை அபாயத்துக்கடையாளமாக அடிக்கச் செய்தான்; 'கோட்செவிக்குறளைக் காற்றுடனெருப்பு' என்பது போலச் சாதாரணமான குடிவெறிச் சண்டையை ஒருபெருங் கலகமாக்கி எங்கும் பற்றவைத்தான்! மணி முழக்கம், தூங்கின ஒதெல்லோவைத் துடித்தெழச் செய்தது; அவன், அவசரமாய் உடுத்திக்கொண்டான்; கலகம்நடந்த இடத்திற் கோடிவந்தான்; காஸியோவை கலகக் காரணம் வினவினன். அப்பொழுது தான், காஸியோ தனது நல்லறிவு திரும்பப்பெற்றான்; குடிவெறி சிறிது தணிந்தது; விடைகூற வெட்கினன். அப்போது அயாகோ, காஸியோவை குற்றங்கூறிக் காட்டிக்கொடுக்க நாணினவன்போலவும், வற்புறுத்திக் கேட்ட ஒதெல்லோவின் கேள்விகளுக்கு விடைகூறக் கடமைப்பட்டவன்போலவும் நடித்து நடந்த விஷயங்களை (அவ்வை முழுவதும் காஸியோவுக்கு ஞாபகமிரா

தாதலால் தன்னுடைய குற்றங்களைமட்டும் மறைத்து) விவரமாய் அறிவித்தான்; காஸியோவின் குற்றத்தைக் குறைத்துக்கூறுபவன்போலக் காட்டி அதிகமாகப் புனைந்துரைத்தான். இதனுல், ஒழுங்கை மதிக்கும் உத்தமாதிகாரியாகிய ஒதேல்லோ, உதவிசேனுதிபதிப் பதவியினின்றும் காஸியோவை நீக்கநேர்ந்தது. இவ்வண்ணம், அயாகோவின் முதற்சூழ்ச்சி முழுவதும் நிறைவேறிற்று. தனது மாற்ருனை இரகஸியத்திற் கெடுத்து அவன் பதவியைக் குலைத்து விட்டான்.

'கெடுப்பதொழி' என்ற நீதியை யுணராத இவன், இந்தக் கோர சம்பவத்தையே காரணமாக வைத்துக் கொண்டு இன்னும் பல கொடுமைகளைச் செய்வானுயினுன்.

கிரகணத்திற்குப் பிறகு ஒளிமிகும் மதியைப் போல, இந்தச் சங்கடத்திற்குப் பிறகு மதிமிகுந்த காஸியோ, தனது போலி நண்பனுகிய அயாகோவை நோக்கி "அண்ணே! நான் எத்தனை மூடன்; மிருகம் போலானேனே! குடித்ததனுல் வீணுய்க் கெட்டழிந்தேனே! மறுபடியும் என்னது உத்தியோகத்தை விரும்பி நமது தலைவரை எங்ஙனங் கேட்பேன்! என் நெஞ்சே என்னைச் சுடுகிறதே! என்னைக் குடியன், வெறியன், நடியன், இழிஞன் என்று பிறர்கூற உடலெடுத்தேனே என்று வருந்திக் கூறினுன். அதற்கு அயாகோ அந்தக்

குற்றத்தை அற்பமாய் மதித்தவன்போல நடித்து, "சமயாசமயத்திற் குடியாத மனிதன் பூலோகத்தில் எவனுமிலன்; என்ன முழுகிப்போயிற்று? கெட்டுப்போன காரியத்தைச் செம்மைபெறச் செய்வதே நமது கடன்; பிரதம சேனுதிபதியவர்கள் மனைவியே பிரதமசேனுதிபதி; அவள் நினைத்தபடி யெல்லாம் ஒதெல்லோவைத் திருப்பி விடக்கூடும். ஆகையால் நீ அவளிடத்தில் இந்த விஷயத்தை யறிவித்துக் கலந்துபேசு. அவளோ, களங்கமற்றவள்; பரோபகாரி; நீ அறிவித்தவுடனே அவள், உனது வேண்டுகோளை நிறைவேற்றுதல் தனது மேலான கடமையென்றெண்ணி, பிரதம சேனுதிபதியின் தயவை நீ பெறச் செய்வாள். பிறகு உனக்கும் அவர்க்கும் உண்டான மனத்தாங்கல் மாறி முன்னினும் மேலாக அன்பு பலப்படும்" என்று விளங்கவுரைத்தான். இது ஒரு நன்மதிதான். ஆனல் நல்லெண்ணத்தோடு சொன்னதல்ல; அது பின்னுல் விளங்கும்.

அயாகோ சொல்லிக்கொடுத்த படியே காஸியோ டெஸ்டிமோனுவைக்கண்டு தனது குறைகளை விளங்கவுரைத்தான். இவள், எந்த நற்கருமத்துக் காணுலும் எளிதில் பாத்தியப்படக் கூடியவள்; காஸியோவை நோக்கி "நான் உனக்காக நியாய வாதியாய் நின்று, உனது குறைகளை எனது தலைவர்க்குக் கூறிச் சரிப்படுத்துவேன்; இல்லையேல் எனது உயிரை விடுவேன்" என்றுள். இவள் வாக்குக் கொடுத்தபடியே, தனது

கணவர் முன்னிலையில் காஸியோவின் குறைகளை மிகவும் ஒழுங்காகவும் இரக்கமுண்டாகவும் கூறினுள். ஒதெல்லோ, காஸியோவை வெறுத்திருந் தானுயினும் டெஸ்டிமோனுவின் வேண்டுகோளைத் தடுக்கக்கூடாதவனுனன். அவன் அவளை நோக்கி "இவ்வளவு சீக்கிரத்திலா, அத்தனை பெரிய குற்றவாளியை மன்னிப்பது" என்றான். அதற்கு டெஸ்டிமோனு சற்றும் ஒவ்வாமல், "தாங்கள் அவற்கு நன்மை செய்வது, இன்றிரவு, நாளைக்காலை அல்லது மறுநாள் காலை இந்த மூன்றிற்குள் ளாகவேண்டும். அவனைத் தாங்கள் செய்த தண்டனை, குற்றத்திற்குத் தக்கதன்று; மிகவுங் கடுமையானது" என்றனள். இதற்கும் ஒதெல்லோ அசையாமலும் இசையாமலும் ஒரே பிடிவாதமா யிருக்கக்கண்ட டெஸ்டிமோனு "ஆஹா! எனது உயிர்க் காதல! காஸியோவுக்காக நான் இத்தனை வருந்திக்கேட்டுக்கொள்ள வேண்டுமோ! மைக்கல்காஸியோ யார் தெரிகிறதா? அவர்தான் தங்களுக்காக என்னிடத்தில் எத்தனையோ முறை வந்தவர்; நமது விவாக நிச்சயத்துக்குக் காரணரா யிருந்தவர்; தங்களை நான் இகழ்ந்து கூறினபோதெல்லாம் புகழ்ந்துரைத்தவர். அவர் விஷயத்தில் நான் கேட்கும் இது ஒரு சாமானியம் என்றெண்ணுகின்றேன். தங்கள் காதலை நான் சோதிக்கவேண்டுமானுல் இத்தனை அற்பத்தையா கேட்பேன்! ஒரு பெரிய விஷயத்தைக் கேட்கமாட்டேனு!" என்று நெஞ்சுருகிப் பேசினுள்.

"கேட்பார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

என்றபடித் தனதுமனைவியின் நயமொழியிற் கட்டுண்ட ஒதெல்லோ மறுத்துக் கூற மாட்டாதவனுய், அவளை நோக்கி "நங்காய், நீ விரும்பியபடியே செய்வேன்; காஸியோவை மறுபடியும் பழைய வுத்தியோகத்திற் சமயம்பார்த்து நியமிக்கின்றேன்; அவசரப்படாதே; அது எனது கடமை" என்றான்.

ஒருநாள். ஒதெல்லோவும் அயாகோவும், டெஸ்டி மோனுவை நோக்கிச்சென்றார்கள்; அவள் அறைக்குள் நுழையும்போதுதான் காஸியோ தன்னைப்பற்றிச் சிபார்சு செய்யும்படி டெஸ்டிமோனுவிடம் முறையிட்டு விட்டு அந்த அறையின் மற்றொருவழியால் வெளியிற் சென்றான்.

கள்ளவுள்ளமுடையவனுகிய அயாகோ "இது சரியல்ல" என்று மெதுவாய்த் தனக்குள்ளேயே சொல்லிக்கொள்பவன்போல் நடித்துப்பேசினுன். ஒதெல்லோ அவன் சொன்னதை அதிகமாய்க் கவனிக்கவில்லை; உடனே தனது மனைவியுடன்கலந்து பேசினபடியால் அதை மறந்துபோய்விட்டான். ஆனுல் பிறகு அது அவன் ஞாபகத்தில்வந்தது. எங்ஙனம் எனில், டெஸ்டிமோனு அங்கிருந்து அப்புறம் போனவுடனே, அயாகோ, ஒதெல்லோவைநோக்கி "நீர் டெஸ்டிமோனுவை விரும்பி விவாகஞ்செய்ய நிச்சயித்திருந்தகாலத்தில் காஸியோ

நீர் காதலித்ததை அறிந்திருந்தானல்லவா?" என்று கேட்டான். அதற்கு ஒதெல்லோ "ஆம்; அவன் எனக்கும் அவளுக்கும் மத்தியஸ்தனுயிருந்த அந்தக் காலத்தில் எத்தனையோ முறை அவளிடத்திற் போக்கு வரத்தாயிருந்தான்" என்றான். அயாகோ புருவத்தை நெறித்து, அப்போது தான் என்னமோ ஒரு பெரிய துர்விஷயத்தை அறிந்துகொண்டவன்போல நடித்து "அப்படியா!" என்று கூவினன். இதனுல் ஒதெல்லோவுக்கு அறையில் நுழைகையில் டேஸ்டி மோனுவையும் காஸியோவையும்பார்த்து அயாகோ கூறின வார்த்தைகள் ஞாபகம்வந்தன: இவைகளிலெல்லாம் ஏதோ உள்ளுறையிருக்கின்றதென்று எண்ணிக் கொண்டான். ஒதெல்லோ, அயாகோவை நீதிமானென்றும், உள்ளன்புடையவன் சத்தியவந்தன் என்றும் நம்பியிருந்தான். 'திருடனுக்குத்தோன்றும் திருட்டறிவு' என்றபடி திருட்டுப்பயலின் தந்திரங்களெல்லாம் அயாகோவிடத்தில், சாதாரண பெருமித மனத்திற் பெருங் காரியங்கள்போலவும், 'சொல்லாமற் சொல்லல், நினையாமல் நினைத்தல்' என்றபடி சொல்வதற்கரிய பெரிய விஷயங்கள்போலவும் தோற்றின. அதனுல் ஒதெல்லோ, அயாகோவைநோக்கி "அப்பா! நீ அறிந்ததை அறிந்தபடி அறிவி; அது எத்தனை கெட்ட விஷயமானுலும் ஒளியாமற் கூறு" என்றுகேட்டான். அதற்கு அயாகோ "ஐயா! சில இழிவான எண்ணங்கள் என்மனதிற்றோ

ன்றியிருக்கின்றன; எந்த அரண்மனையில் கெட்டவிஷயங்கள் நுழையாதிருக்கின்றன?" என்று விடை கூறி, இன்னும் அவன் "நீங்கள் கண்ணாரப் பாராத விஷயத்தைப்பற்றித் துயருறுவது பரிதாபத்திற் கிடமாகும். நான் எனது எண்ணத்தை வெளியிட்டால், நீங்கள் மனம் புண்ணுவதற்கு ஏதுவாகும். அற்பமான சந்தேகங்களைக் காரணமாகக் கொண்டு ஒருவருடைய நற்பெயரைக் கெடுக்கலாகாது" என்று தூக்குதலாகச் சில வார்த்தைகள் சொன்னான். இவைகளை யெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய்க் கேட்கக்கேட்க ஒதெல்லோவுக்கு வியப்பும் பரபரப்பும் விருத்தியாயின. அப்போது அயாகோ, தான் என்னமோ, ஒதெல்லோவின் மனவமைதியைக் கவனிப்பவன்போல் நடித்து, "சந்தேகம் பொல்லாதது ஜாக்கிரதை யாயிருங்கள்" என்றான். இப்படிப்பட்ட மாய்மால வார்த்தைகளால், சுத்தமனத்துத்தமனான ஒதெல்லோவின் அநுமானத்தை அயாகோ அதிகப் படுத்திவிட்டான்; பார்வைக்கு மட்டும் அவன் அத்தகைய அநுமானங்களைத் தடுப்பவன்போல் நடித்துப் பேசினான். ஒதெல்லோ, அயாகோவை நோக்கி "எனது மனைவி அழகி! நாலுபேர் வரவேண்டும் அவர்களுக்கு விருந்திட வேண்டும் என்னும் எண்ணமுடையவள்; எல்லாரிடத்திலும் களங்கமற்று உறவாடுபவள்; ஆடல் பாடல் சங்கீதங்களில் வல்லவள்; மிகவும் நல்லவள்; எல்லாம் எனக்குத் தெரியும். நல்ல

நடக்கை யுள்ளவளுக்கு இவைகளெல்லாம் நல்ல குணங்களேயாம். அவள், நன்றிகெட்டவள் என்பதற்குச் சரியான அத்தாட்சிகள் வேண்டுமே'' என்றான். அது கேட்ட அயாகோ, ஒதெல்லோ தன் மனைவியின் துர்நடத்தையை நம்பாமைக்கு, மகிழ்பவன்போல் பாசாங்கு பண்ணி ''ஐயோ பெண்பாவம், பெண்தோஷம்; நான் எந்த அத்தாட்சியைக் கொண்டு அவளை நன்றிகெட்டவள் என நாட்டுவேன்? நீரே நன்றாய்க் கவனித்தால் எல்லாம் விளங்கும். அவளருகில் காஸியோ வந்திருக்கையில் சற்றே கவனிக்கவேண்டும். மனதில் துவேஷம் இல்லாமலும் சாதாரணமாய் இருந்துவிடலாகாது. இட்டலி தேசத்துப் பெண்கள் நடவடிக்கையைப்பற்றி உங்களைவிட நான் அதிகம் அறிவேன். நானும் அந்த நாட்டான்; டேஸ்டிமோனவும் அந்த நாட்டாள். அவள் தனது தந்தையை ஏய்த்தவிதம் நீர் அறியாததா? அவள் உம்மையே வரித்திருக்கின்றாள் என்றாலும் அந்தக் காலத்தில் அவள் தனது தந்தையை வஞ்சனை செய்தாள் என்பதிற் றடையென்ன? அவள்செய்த மோசத்தால், கிழவன் பயந்து நடுங்கி, நீர்தான் அவளுக்குச் சூனியம்வைத்து, மயக்கிவிட்டீர் என்று சொல்லும்படி, அவள் ஒரேபிடியாய்க் கிழவனைப் பெருமோசம் பண்ணிவிட்டாளே! மோசம் நாசம் கம்பளிவேஷம் அல்லவா?'' என்றான். இந்தப் புனைசுருட்டுநியாயங்களால், ஒதெல்லோ மனந்தடுமாறி அயாகோ சொன்ன

தை யெல்லாம் அப்படியே நம்பி "அப்பனைமோசம் பண்ணினவள் அகமுடையானை மோசம்பண்ணத் தடையென்ன?" என்று எண்ணிக்கொண்டான்.

ஒதெல்லோவுக்கு மனக்கலக்கமுண்டாக்கி விட்டதற்காக, அயாகோ, அவனை மன்னிப்புவேண்டினன். ஒதெல்லோ அதனைக் கேளாதவன்போல மேலுக்குக் காட்டி, உள்ளுக்குள்ளே, அயாகோவின் வார்த்தைகளால் மிகத் துயருழந்து, "உனக்கு இன்னும் ஏன்னென்ன தெரிந்திருக்கின்றதோ, அதையெல்லாம் சொல்" என்றான். அதற்கு அயாகோ அநேக சாக்குப் போக்குகள்சொல்லி, அவைகளால், காஸியோவைக் காட்டிக்கொடுக்க விரும்பாதவன்போலவும் அவன் தனக்கு உண்மை நண்பன்போலவும் நடித்துக் கடைசியாகத் தனது எண்ணத்தை வெளியிட்டான்: அவன் ஒதெல்லோவைநோக்கி, "தனது நாட்டிற்பிறந்து தன்னைப்போலவே மேனிநிறம் பெற்றுத் தனது வயதுக்குச் சரியாயிருந்த விடபுருஷரை விடுத்து, மௌரியராகிய உம்மை மணந்த டேஸ்டிமோனுவின் பிடிவாத குணம் நியாயவிரோதம்; அவள் அறியாத்தன்மையால், மனம்போனபடியே அந்தக்காலத்தில் நடந்துகொண்டாள்; இப்போது அவளுக்குப் பகுத்தறிவு மிகுந்திருப்பதால், யோசனையும் யுக்தியும் மாறுபட்டு, உமது மேனி நிறம் முதலியவைகளைத் தனது இட்டலி நாட்டாருடைய மேனி நிறம் முதலியவைகளோடு ஒப்

பிட்டுப் பார்ப்பது சகசந்தானே! ஆகையால் காஸியோவுக்கு நன்மைசெய்வதைத் தாங்கள் தற்காலம் சற்றே நிறுத்திவைத்து, டெஸ்டிமோனு, அவன்விஷயத்தில் எத்தனை அக்கரையோடு பாடுபட்டுப் பேசுகிருள் என்பதைக் கவனியுங்கள்; அதனுல் எல்லாம் விளங்கும்" என்று கபடநாடகம் படித்தான். குற்றமற்ற நங்கையாகிய டெஸ்டிமோனுவின் அருங்குணங்களையே அவளுடைய அழிவிற்குக் காரணமாக்கி, அத்தனை கெடு நினைப்போடு அந்தக்கள்ளவுள்ளச் சண்டாளனுகிய அயாகோ, தனது தீவினைச் சூழ்ச்சியை வெளியிட்டான். அவளுடைய நற்குணக்கயிற்றைக்கொண்டே ஒரு வலையைப் பின்னி அதனில் அவளை அகப்படுத்த வேண்டுமென்பது அவனுடைய கோரிக்கை. ஆகையிலேயே அவன், உத்தியோகத்தை முன்னிட்டுக் காஸியோவை அவளிடத்திற்செலுத்தியதும், அதுமுதல் அவளதழிவிற்குச் சூழ்ச்சி செய்வதுமாம்.

"ஈக்கு விடந்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங் கொடுக்கில் வாழுமே - நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்."

என்றமூதுரை இங்கே கவனிக்கப்படவேண்டும்.

இவ்வாறிவர்கள் இருவரும் பேசிக் கடைசிமுடிவில், அயாகோ ஒதேல்லோவை நோக்கி "தகுந்த அத்தாட்சி கிடைக்கும்வரையில், நீர் உமது மனைவி

யைக் கற்புடையளென்றே கருதக்கோருகிறேன்" என்று வேண்டிக்கொண்டான். ஒதேல்லோவும் அதற்குடன் பட்டான். ஆனாலும், மோச வலையிற்பட்ட ஒதெல்லோ, அது முதல் மனவமைதியை யிழந்து மயங்கினன்; அவனுக்குத் தூக்கமே கிடையாது. தூக்கம் உண்டாக்கு மருந்துகளாகிய அபினி முதலியவஸ்துக்களில் எதுவும் அவனுக்குத் தூக்கத்தை உண்டாக்கியிராது. அது அன்றைக்கு முந்திய நாளோடேயே முடிந்தாய்விட்டது. அவனுடைய உத்தியோகம் அவனுக்குத் துன்பம் விளைத்தது.

ஆயுதப் பயிற்சியிலும் யுத்தமுயற்சியிலும் ஊக்கத்தை யிழந்தான். சேனைகள், கொடிகள், சேனையின் அணிவகுப்புமுதலியவைகளைக் கண்டவுடனே, உற்சாகங் கொள்ளுதலும் யுத்தமுரசு முழக்கம் எக்காளத் தொனி, போர்ப்புரவியின் கனைப்பு முதலியவைகளைக் கேட்டவுடனே வீறுப்படைதலும் பொருந்தியிருந்த அவனதிதயம் யுத்தவீரனுக்குள்ள சுத்தகுணங்களாகிய இறுமாப்பு, பெருந்தகைமை முதலியவைகளை முழுவதும் இழந்து தவித்தது. அவனுடைய யுத்தமுயற்சியின் திறமையும் சந்தோஷமும் அவனைவிட்டுப் பிரிந்தன. சிலசமயத்தில் அவன், தனது மனைவியைக் குற்ற மற்றவளென்றெண்ணித் தியங்குவான்; சிலசமயத்தில் குற்றமுற்றவளென்று மயங்குவான்; சிலவேளையில் அயாகோ அயோக்கியனென உன்னுவான்; சில

வேளைகளில் அவனே யோக்கியனென எண்ணுவான்; ஏனோ இதை உணர்ந்தோமென வருந்துவான்; நாம் காணுதவரையில், காஸியோவுக்கும் அவளுக்குமுள்ள கடுநட்பால் நமக்கென்ன துன்பம் எனத் திருந்துவான். இத்தகைய விபாகூல சிந்தையால், சித்தங்கலங்கி, ஒரு நாள், அவன், அயாகோவின் தொண்டையைப் பிடித் தழுத்தி டேஸ்டிமோனுவின் துர்நடத்தைக்கு அத்தாட்சி கேட்டான்; அங்ஙனம் அயாகோ அத்தாட்சி காட்டாவிட்டால், அவளை அவதூறு பேசியதற்காக அப்போதே அயாகோவைக் கொன்றுபோடுவதாகவும் பயமுறுத்தினன். அயாகோ தனது உண்மையைப் பொய்யாக்கி விட்டதற்காக வெறுத்துக் கொள்பவனைப் போலப் பாசாங்குபண்ணி, ஒதெல்லோவை நோக்கி, “ஐயா! தக்காளிப் பழத்தைப்போலப் புள்ளிகள் விழுந்த கைக்குட்டையொன்று, டேஸ்டிமோனு வைத்திருந்த காலத்தில் நீங்கள் பார்த்திருக்கின்றீர்கள் அல்லவா?” என்றான். “ஆம் நான்தான் அதை அவளுக்குக் கொடுத்திருந்தேன்; அதுவே, நான் அவளுக்குக் கொடுத்த பிரதம நன்கொடை” என்றான் ஒதெல்லோ. “அந்தக் குட்டையாலேதான், காஸியோ தனது முகந் துடைத்துக்கொண்டிருந்தபோது, இன்று நான் நிச்சயமாய்ப் பார்த்தேன்” என்றான் அயாகோ. “நீ சொல்வதுநிஜமானல், அவர்கள் இருவரையும் அடியோடு அதமாக்குகிறவரையில் என்மனம் ஒரு நிலையில் நிற்

காது. உனது நன்றி அறிவுக் கடையாளமாக, காஸி யோவை முதலிற் கொல்லவேண்டும்; அதுவும் மூன்று தினங்களுக்குள் முடியவேண்டும். அந்தப் பெண்பே யைக் கொல்லத்தக்க சூழ்ச்சி தூரிதத்தில் நானே செய் கின்றேன்'' என்முன் ஒதெல்லோ.

வருஷக்காய்ச்சல் மாதக்காய்ச்சல் தினக்காய்ச்சல் கொண்டவர்களுக்கு மருந்துண்டு, பிழைக்கும் வழி யுண்டு; சந்தேகக்காய்ச்சல் கொண்டவர்க்குக் காற்றிற் பறக்கும் அணுவும் மலையாய் வேதவாக்கியம்போல நிலைத்துப் பலத்துவிடுகின்றது. மருண்டவன் கண் ணுக்கு இருண்டதெல்லாம் பேயென்பதுபோல, மனந் தடுமாறியிருந்த ஒதெல்லோவுக்குத் தனது மனைவியின் கைக்குட்டை, காஸியோ கையிலிருந்ததென்னும் அற்ப விஷயமானது அவன் கையில் அக்குட்டை எப்படி வந்த தென்று விசாரியாமலே, அவர்கள் இருவருக்கும் மரண தீர்ப்பு செய்யும்படியான அத்தனை பெருங்குற்ற மாய்விட்டது. டெஸ்டிமோனு அத்தகைய வெகுமதி யைக் காஸியோவுக்குக் கொடுத்ததே கிடையாது; கற் புக்கரசியாகிய அவள் தனது கணவனளித்த கையுறை யைப் பிறர்க்களிப்பதாகிய தகாச் செய்கையால் ஒருபோ தும் புருஷத்துரோகியாயிருக்கமாட்டாள். காஸியோ, டெஸ்டிமோனு இவர்கள் இருவரும், ஒதெல்லோ வுக்கு எந்தவிதத் தீங்கும் செய்யாத பரிசுத்தர்கள். ஆனால், படுமோசம்செய்வதில் ஊக்கங் குறையாமல் தூக்கமின்றியிருந்த துஷ்டன் அயாகோ, நற்குணமும் சொற்படி செய்யும் இயல்புமுள்ள தனது மனைவிக்கு, டெஸ்டிமோனுவின் கைக்குட்டையைப்போல வேறு செய்துகொள்ள வேண்டுமெனப் பொய்கூறி அதற்காக

அவளை ஏவி, அதைத் திருடிவரச் செய்தான். வாஸ்தவத்தில் அப்படிச்செய்வதற்கல்ல. அந்தக்குட்டையைக் காஸியோ வரும் வழியிற் போட்டுவைத்து, அதை அவன் எடுத்துக்கொண்டபோது, அது டெஸ்டிமோனு அவனுக்குக் கொடுத்ததென ரூபகாரப்படுத்திக் காட்டும்பொருட்டேயாம். அப்படிச் செய்துமாயிற்று.

ஒதேல்லோ, தனது மனேவியைச் சந்தித்தவுடனே, தனக்கு வாஸ்தவத்திலேயே தலைநொந்ததுபோலப் பாசாங்குபண்ணி அவளுடைய கைக்குட்டையால் தனது தலையைச்சுற்றிக் கட்டவேண்டி அதனைக் கொஞ்சம் இரவல் கேட்டான். அவள் அப்படியே கொடுத்தாள். "இதுவல்ல; நான் உனக்குக் கொடுத்த குட்டை" என்றான் ஒதேல்லோ. டெஸ்டிமோனுவிடத்தில் அந்தக் கைக்குட்டை கிடையாது. அதுவாஸ்தவத்தில் நாம் முற்கூறியதுபோலத் திருடிக்கொள்ளப்பட்டது. "என்ன இது மோசமாயிருக்கிறதே! எகிப்திய ஸ்திரீ ஒருத்தி எனது தாய்க்குக் கொடுத்த குட்டை அது; அந்த ஸ்திரீ மந்திரக்காரி; மனிதர் எண்ணங்களைச் சொல்லாமலே அறிந்துகொள்ளக்கூடியவள். அவள் என் தாயை நோக்கி 'அம்மா! இக்குட்டை உன்னிடத்திலிருக்குமட்டும், நீ வெகு ரூபவதியாயிருப்பாய்; உன் துணைவர் உன்னை மிகவும் விரும்புவார். நீ இதை இழந்துவிட்டால், உன் துணைவர் உன்னை விரும்பமாட்டார்; அவ்வளவுக் கவ்வளவு வெறுப்பார்' என்றாள். அப்படியே என் தாயார் அந்தக் குட்டையை வைத்துக்கொண்டிருந்து, தான் இறந்துபோகும்போது என்னிடத்திற் கொடுத்து, 'தம்பீ, நீ கலியாணஞ்செய்துகொண்ட பிறகு, இதை உனது மனேவி கையிற் கொடு' என்றாள். நான் அப்

படியே செய்தேன். அதை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்; உன் கண்ணைப்போல அதையும் எண்ணிக் காப்பாற்று" என்றான் ஒதெல்லோ. இதைக்கேட்ட டெஸ்டிமோனு திகிலடைந்து, "அது அப்பேர்ப்பட்ட குட்டையா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அதற்கு ஒதெல்லோ "ஆம், அது மந்திரித்த குட்டை; அற்புதமானது; இருநூறுவருஷம் வாழ்ந்திருந்த மந்திரக்காரி யொருத்தி, தன்மேல் பொல்லாத ஆவேசம் வந்து குறிசொல்லிக் கொண்டிருக்கையில் அக்குட்டையை நெய்தாள். அதற்குப் பட்டுத்தந்த, பட்டுப்பூச்சிகளும் பரிசுத்தப்பட்டன; கன்னிகழியாத பெண்களின் இருதயத்திற் செய்த கருவினுல் அது சாயம் போடப்பட்டது" என்றான். அந்தக்குட்டையின் அதிசயமான வரலாற்றைக் கேட்ட டெஸ்டிமோனு பயத்தால் இறக்கத் துணிந்தாள்: உண்மையில், தான் குட்டையை யிழந்ததுமன்றி அதனுல் கணவனுடைய அன்பையும் கூட இழந்ததை நன்குணர்ந்தாள். அப்போது ஒதெல்லோ தான் ஏதோ ஒரு கொடுஞ் செய்கையை முன்பின் யோசியாமல் செய்யப்போகிறவனைப் போலத் திடுக்கிட்டு மறுபடியும் "எங்கே குட்டை?" என்றான்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்றபடி தான் நடந்துகொண்டு அந்தக் குட்டையைக் கொடுக்க இயலாமைக்கு உள்ளுக்குள்ளே வருந்தினுளாயினும், டெஸ்டிமோனு தனது கணவனுடைய கவனத்தை வேறு செலுத்துவிக்க எண்ணி, இன்ப முகங் காட்டி "எல்லாம் எனக்குத்தெரியும்; நீங்கள் அந்தக் குட்டையைப்பற்றி இவ்வளவு பிரமாதம்பண்ணுகிறது

என்னத்துக்காகச் சொல்லட்டுமோ? இவள் என்ன! எப்போது பார்த்தாலும் காஸியோவுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிருளே! இந்தச் சாக் காலேயாவது அதை ஒழித்துவிடலாம் என்பதுதான். வேறென்ன?" என்று சரச சல்லாபமாய்ப் பேசினுள். அன்றியும் அப்போதுகூடக் காஸியோவைப் பற்றிப் புகழ்ந்துகொண்டேயிருந்தாள். அயாகோ சொல்லி யிருந்தது ஒதெல்லோவின் ஞாபகத்தில் வந்தது.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

என்றபடி கற்புக்கரசியாய் விளங்கிக் களங்கரகிதமாய் வாழ்ந்த டெஸ்டிமோனு அப்போது தானிருந்த நிலே யில் வேறு தோற்ருமல், அதனுல் வேறு சாற்ருமல்,

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

என்றபடி உள்ளது உள்ளபடி பேசினுள். அது கேட்ட ஒதெல்லோவுக்கு, நெருப்பில் நெய்விட்டபடி கோபம் அதிகரித்தது. அந்த அறையைவிட்டு அப்பால் ஓடி ஞன். அதைக்கண்ட டெஸ்டிமோனு "ஓஹோ, நமது யஜமானர்க்கு நம்மிடத்தில் ஏதோ சந்தேகம் உண்டா யிருக்கின்றதே!" என்று வேறு விதியில்லாமல் எண் ணிக்கொண்டாள். ஒதெல்லோவுக்குத் தன்னிடத்தில் சந்தேகம் உண்டாகும்படி தான் செய்த காரியம் இன்ன தென்று டெஸ்டிமோனுவுக்குத் தெரியாது. ஆகையால் அவள் "பெருந்தகையாகிய நமது கணவர்மேல் வீண் யக் குற்றம் நினைத்தோமே!" என்று தன்னைத்தான் வெறுத்துக்கொண்டாள்; "இப்படி அவர் மனத்தைக் கலக்கி அவருடைய உத்தம குணத்தை மாற்றும்படி

வேனிஸ் நகரத்திலிருந்து அவருக்குப் பிரதிகூலமான சமாசாரம் ஏதாவது வந்ததோ! அல்லது இராஜாங்கத்தில் ஏதாவது சங்கடங்கள் நேரிட்டனவோ? புருஷர்கள், கடவுளர் அல்லர். கலியாண காலத்தில் புதுக் கூட்டுறவு ஆனநாளில் அவர்கள் காட்டும் அன்பே முழுமையும் நீடித்திருக்குமென்று நாம் (ஸ்திரீகள்) எதிர்பார்க்கப்படாது'' என்று தெளிந்து கூறினுள்; தன் கணவனை நிந்தித்ததைப்பற்றி மறுபடியும் தன்னைத் தானே நொந்துகொண்டாள்.

மறுபடியும் ஒதெல்லோவும் டெஸ்டிமோனுவும் சந்தித்தார்கள்; இப்போது அவன், வெளிப்படையாய் அவளை நிந்தித்தான்; அவள் நன்றி கெட்டவள் என்றும் நயவஞ்சகி என்றும் பரபுருஷனை இச்சிப்பவள் என்றும் பகிரங்கமாய்க் கூறினுன்; அந்தப் பரபுருஷன் பெயரைக் கூறமாட்டேன் என்றுன்; அழுதான். டெஸ்டிமோனு தன்னை அவன் நிந்திப்பதற்கு அவனை வெறுக்காமல், அவன் அழுவதற்கு வருந்தி "ஆஹா! காதல! என்ன கெட்டகாலம்! ஏன் அழுகின்றீர்?" என்றுள். அதுகேட்ட ஒதெல்லோ "வறுமை வரினும் வருக; நோய்வரினும்வருக; அவமானம்வரினும் வருக; இன்னும் மற்றெது வரினும் வருக; நான் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்வேன்; ஆனுல் உன்னுடைய புருஷத்துரோகத்தைமட்டும் நான் சகியேன். அது எனது மனத்தை இருபிளவாய்ப் பிளந்துவிட்டது. ஆஹா! நீ ஒரு பதருக்குச் சமானமானுய்; பார்வைக்குத் தானியம்போலிருந்தும் உள்ளீடில்லாமல், குற்றினவர்களுக்குப் பலன்தராமல் கஷ்டம்கொடுக்கும் அதுவும் நீயும் சமம். நிலத்திடை நீயேன் பிறந்தாய்?

மலத்திடையே புழுத்த சிறு புழுக்களினும் தாழ்ந்தவளே!'' என்று துக்கித்து அகன்றனன். அவன் நீங்கினவுடனே,

'தேரையார் செவ்விளநீர் உண்ணுப் பழிசுமப்பார்'
என்றபடி வீண்பழி சுமந்த சுத்தமனத்துத்தமியாகிய டேஸ்டிமோனு தன்னை மறந்த வசமாய்,

''காலையிலும் மாலையிலும் காகம் குளித்துவஞ்ச
வேலையிலும் மிக்கு விளங்குமே—நீல
மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்''

என்றபடி கள்ளவேடம் பூண்ட கசடனுகிய அயாகோவின் மாய்மால வார்த்தைகளில் மயங்கிக்கிடக்கும் தனது நாயகனுடைய அநியாய சந்தேகத்துக்கு ஆச்சரியமடைந்து, என்றைக்குமில்லாத தூக்கம் வந்தபடியால், தனது தோழியை அழைத்துத் தனது மணக்கூறையை விரித்துப் படுக்கை போடச்சொல்லி அதன்மேற் படுத்துக்கொண்டு ''குழந்தைகளுக்குப் பெற்றோர், புத்தி புகட்டுவது, சிறிது சிறிதாகவும் சாந்தமாகவுமேயல்லவா? அதுபோலவே நமது காதலரும் நம்மை வருத்தாமலும் குற்றத்தை நேரிற் காட்டிக்கொள்ளாமலும் பட்டதும் படாததுமாகப் புத்திசொன்னுர். அவர்க்கு எல்லாந்தகும். நம்மை அடிக்கவுந்தகும்; அணைக்கவுந் தகும்.

''நல்லருணை வாழ்நாதர் நம்மை வருத்துவது
கொல்லவா பொல்லாக் குணம்போகக்—கல்லின்
மழுக்குவதும் கூறைதனை மாற்றவா வண்ணன்
அழுக்கு வாங்கைக்கா மது''

என்றபடி நம்மையவர் வருத்தினுலும் அது நமது நன்மைக்கே ஆகும். நாம் அவர்க்கு ஒரு குழந்தையைப்

போலவே யிருக்கின்றோம். அதனால் அவர் நமக்குப் புத்தி சொல்லுகின்றார்'' என்று இந்தப் பெருமிதமான பரிசுத்த எண்ணந்தவிர மற்றொன்றும் அந்த நற்குண நிறைந்த நங்கை எண்ணினாள் இல்லை.

டெஸ்டிமோனு, தனது நாயகன் வருவார் வருவார் என்று எண்ணிக்கொண்டபடியே படுத்துக்கொண்டாள். ஆதலால் அப்படியே தன்னையு மறந்து தூங்கி விட்டாள். அப்போது கரியனாகிய இயமன் கருமையாகிய எருமைக் கடாவின்மேல் ஏறி வருவான் போல, கரியனாகிய ஒதெல்லோ, கடுங்கோபமென்னும் எருமைக்கடாவிலேறித் தனது மனைவியின் உயிரைவாங்க வேண்டுமென்று அவளுறங்கின அறைக்குட் பிரவேசித்தான். ஆனால், அவன் தனது மனைவியின் உறக்கத்தைக் கண்டு, சிறிது இரக்கத்தைக் கொண்டு, "இரத்தம் சிந்தும்படி இவளைநான் எங்ஙனம் வெட்டுவேன்! அந்தோ! பளிங்கினும் வெளிப் பரிசுத்தமான இவளுடைய மேனியை எங்ஙனம் ஊறு படுத்துவேன்! ஆயினும், இவளைக் கொன்றுவிடுவதே உத்தமம்; இல்லையேல் இவள் என்னைச் செய்ததுபோலவே பலரையும் மோசம் செய்வாள்'' என்று எண்ணி "இவளை இனிப் பார்க்கப் போகிறதில்லை யல்லவா?'' என்று அவளை முத்தமிட்டான்.

"ஆ! இம்முத்தம் எத்தனை இனிமையாயிருக்கின்றது! இன்னும் ஒரு முறை முத்தமிடுவேன்'' என்று அப்படியே செய்தான்; அழுதான்; "ஐயையோ! இப்பேர்ப்பட்ட இரக்கமற்ற பாவியாகிய எனக்கும் கண்ணீர் வருகின்றதல்லவா?'' என்றான். முத்தமிட்டதால் டெஸ்டிமோனு விழித்துக்கொண்டு, ஒதெல்லோ

வைக் கவனித்தாள்; அவன் தன்னுடைய கீழுதட்டைக் கடித்துக் கண்களைச் சுழற்றிக்கொண்டிருந்தான். இப்படி இருந்தபோதெல்லாம் அவன் ஏதோ ஒரு கெடுதி செய்யவிருக்கின்றுன் என்பது அவளுக்குத் தெரியும். அவன் உடனே அவளைநோக்கி "இதோ உன்னைக் கொல்லப்போகிறேன்; நீ இறப்பதற்குச் சித்தமாயிரு; கடவுளைத் தியானி; நான் உன் உடலைச் சேதிப்பேனே தவிர ஆத்மாவைச் சேதிக்கமாட்டேன்" என்றுன். இப்படியவன் வசப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்த அவனது பரிசுத்த மனைவியாகிய அவ்வுத்தமி; "காதல! இப்பெண்பாலாகிய அடியேன்மேற் கோபிக்கவேண்டாம்; கிருபை செய்யவேண்டும்; நான் கொடும்பாவி; ஆனுலும் எனது பிழைகளைத் தேவரீர் திருவுளமிரங்கிக் கூறவேண்டுகின்றேன்" என்றுள்.

அதற்கு அவன், காஸியோவின்பெயரைச் சொல்லி, "அவனுக்கு நீ கைக்குட்டை கொடுத்ததை நினைத்துக் கொள்" என்றுன். அதுகேட்ட டெஸ்டிமோனு இடிவிழுந்த அரவம் போல ஏங்கி "நான் ஒரு பாவத்தையும் அறியேனே! ஆ! கடவுளே! இது என்ன கொடுமை" என்று தனது பரிசுத்த நடக்கைக்கு அத்தாட்சி காட்ட முயன்று பல நியாயங்களைக் கூறிக்கொண்டிருக்கையிலேயே, கருங்கல்லில் அறைந்த ஆணியைப்போல் அவளுடைய வார்த்தைகள் அவன் செவியிலேறுமலே திடீரென்று, படுக்கையிலிருந்த மணக்கூறை துப்பட்டி முதலியவைகளால் அவளைச்சுற்றி மூச்சுப்பேச்சில்லாமல் திணறிப்போம்படி அழுத்திக் கொன்றுவிட்டான்.

அப்போது அயாகோ, தனக்கு வேண்டிய ஒருவனை அனுப்பிக் காஸியோவைக் கொல்ல ஏற்பாடு செய்திருந்

தான். அவன் காஸியோவைக் கொல்லாமல் இலகுவா ய்க் காயப்படுத்தினதை அயாகோ கண்டு, "இவனைச் சும்மாவிட்டால் நமது மோசம் வெளியாய்விடும்" என் றெண்ணி, அவனைத் தானே கொன்றுவிட்டான். அவ னுடைய சட்டைப் பைக்குள் சில கடிதங்கள் அகப்பட் டன. அவைகளால் அயாகோவின் மோசங்களும் காஸி யோவின் நற்குணங்களும் வெளியாயின. சந்தேகம் நிவர்த்தியாய்விட்டது. காஸியோ, ஒதெல்லோவை நோக்கி ஓடிவந்து "ஐயா! நான் சொல்வதைப்பற்றி என்னை மன்னிக்கக் கோருகிறேன்; நான் எந்தவிஷயத் தில் தங்களுக்குக் குற்றஞ்செய்தேன்? அதைத் தயவு செய்து எனக்குத் தெரிவிக்கவேண்டும். எதனல் தாங் கள் என்னைக் கொல்லும்படி அயாகோவை ஏவினீர் கள்?" என்றுகேட்டான்.

இதைக் கேட்ட மாத்திரையில் ஒதெல்லோ இடி விழுந்த மாதிரி நடுநடுங்கிப் போனன்; உண்மையுணர் ந்து கொண்டான்; தான் ஒரு கொலைகாரன் என் பதைத் தெரிந்துகொண்டான்; தனது மனைவி மஹா பரிசுத்த பதிவிரதை, தனக்கு ஒருபோதும் துரோகஞ் செய்ய வில்லையென அறிந்து கொண்டான்; அப்படிப் பட்ட உத்தமியைத் தான் அநியாயமாய்க் கொன்றதை யும் உணர்ந்தான். ஐயோ பாவம்! இப்போது உணர்ந் தென்ன லாபம்! 'மறந்து செத்தேன், பிராணனே வா' வென்றால் வருமா?

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என்றபடி தனது மனைவியைக் கொன்ற துயரம் பொறு க்க மாட்டாமல் தனது கைவாள் மேல்விழுந்து மனைவி மேற் சாய்ந்து உயிர் துறந்தான்.

ஒதெல்லோ மிகவும் உத்தமன் என்றுபேர்போன வன்; இயற்கையாகவே பெருந்தன்மை யுள்ளவன்; தனது மனைவியிடத்தில் ஒருவித சந்தேகமுமில்லாத

வன்; படுபாவியும் சண்டாளனுமாகிய அயாகோவின் மோசவலையிற்சிக்கி வீணே மனைவியோடு மாண்டான்; அதற்கு முன் தனதன்புள்ள மனைவியிடத்தில் தன் உயிரையே வைத்திருந்தான். ஆகையால் அப்படிப்பட்டவன் முன்பின் பாராமல் அவசரப்பட்டுச் செய்த காரியத்திற்கு அண்டையிலிருந்தவர்கள் ஆச்சரியமும் பயமும் அடைந்து நடுங்கினுர்கள். ஒதெல்லோ தனது மனைவியை மிகவும் அன்புபாராட்டி நடத்தினுன்; ஆனுலும் முன்யோசனை இல்லாதவன்.

அவன் அற்ப சம்பவங்களுக்கெல்லாம் அழாத தீரன்; ஆனுலும் தனது மனைவியைக்கொன்ற பிழையை யுணர்ந்தபோது அரபி விருக்ஷங்கள் பிசினை ஒழுக விடுவதுபோலக் கண்ணீர் விட்டுக் கலங்கி அழுது உயிர் துறந்தான். இவன் இறந்தபிறகு இவனுடைய வீர தீரச் செய்கைகளையும் உத்தம குணங்களையும் மறக்காமற் கொண்டாடினுர்கள். இவனுக்குப் பிறகு அந்தச் சேனுதிபத்தியத்திற்கு வந்தவன் அயாகோவைப் பிடித்துச் சித்திரவதை செய்து சட்டப்படிச் சிரச்சேதம் செய்து கொன்றுன்; மகா பிரதாப சேனுதிபதியாகிய ஒதெல்லோ மனைவியுடன் இறந்தான் என்னும் விசன கரமான சமாசாரத்தை வெனிஸ் ராஜாங்கத்தாருக்குத் தெரியப்படுத்தினுன்.

ஒதெல்லோ தன்மனைவி உத்தமியைக் கொன்றபின்பு
சித்தம ழிந்தழுது செத்துவிட்ட - தத்துவத்தால்
எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு.

மாந்தர்க ளெல்லாம் மனைவியரை ஐயுறுர்
சாந்தமுடன் வாழ்ந்து தழைப்பரே—ஆந்தமது
மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு.

முற்றிற்று.

இந்நூலின்

## அரும்பத விளக்க அகராதி.

அ

அநுசிதம் - தகுதியற்றது.
அந்தரங்க - இரகசிய.
அருவினை - கஷ்டமானகாரியம்.
அளக்கரும்-அளவிடமுடியாத.
அனுமானம் - யூகம்.

ஆ

ஆண்டாண்டாக - அநேகவருஷங்களாக.
ஆர்தல் - குடித்தல்.

இ

இடும்பை - துன்பம்.
இழுக்கு - குற்றம்.
இறை - கொஞ்சம்.
இறைஞ்சுதல் - வணங்குதல்.
இற்பணி - வீட்டுவேலை.

உ

உள்ளுறை - மறைபொருள்.
உன்னுதல் - நினைத்தல்.

ஊ

ஊறு - துன்பம்.

எ

எய்திய - அடைந்த.
எழில் - அழகு.

ஏ

ஏந்தெழில் - மிக்கஅழகு.

ஔ

ஔஷதம் - மருந்து.

க

கப்புதல் - மூடுதல்.
கழறுதல் - சொல்லுதல்.
கழிபேர் - மிகவும்அதிகமான.

கா

காந்தையர் - பெண்கள்.

கு

குடிப்பிறந்தார் - நல்லகுடியிற் பிறந்தவர்.
குறளை - கோட்சொல்லுதல்.

கூ

கூட்டுறவு - சிநேகம்.
கூறை - வஸ்திரம்.

கே

கேளார் - பகைவர்.

கை

கையுறை - காதலன் காதலிக்குக் கொடுக்கும் வெகுமதி.

ச

சந்ததம் - எப்பொழுதும்.

சா

சாலும் - போதும்.

சூ

சூத்திரம் - உபாயம்.
சூழ்ச்சி - தந்திரம்.

செ

செருக்கு - கர்வம்.

சோ

சோர்வு - குறைவு.

த

தகைசான்ற - நன்மையுள்ள.
தண் - குளிர்ந்த.
தற்காத்து - தன்னைக்காத்து.

தி

திண்மை - உறுதி.
திறல் - வலிமை.

து

துஞ்சுதல் - தூங்குதல்.

தூ

தூய - பரிசுத்தமான.

ப

பகருவது - சொல்லுவது.
பகிரங்கம் - வெளிப்படை.
பயின்ற - செய்த.
பல்லாண்டு - வாழ்த்துப்பாட்டு.

A - 2.A

பி

பிணிக்கும் - வசப்படுத்தும்.
பிரதமம் - முதல்.
பிரயோகம் - செலுத்தல்.

பு

N93205

புரைதீர் - குற்றமற்ற.
புனைசுருட்டு - சதியோசனை.

பே

பேணுதல் - காப்பாற்றுதல்.

பை

பைங்கணரவு - பசுமையான கண்ணையுடைய பாம்பு.

போ

போய்யற்க - பொய்யாகக் கூறுதீர்.

ந

நட்டல் - சிநேகித்தல்.
நண்பர் - சிநேகிதர்.
நயந்து - விரும்பி.
நயமொழி - இனியசொல்.

நு

நுகர - அனுபவிக்க.

ம

மடவரல் - இளம்பெண்.
மணவாளன் - புருஷன்.
மணி - ஒருமருந்துக்கல்.
மருள - மயங்க.
மனக்கிளர்ச்சி - சந்தோஷம்.
மனை - வீடு.

மா

மாண்டார் - மாட்சிமைபொருந்தியவர்.

மு

முகாந்தரம் - காரணம்.

வ

வதூவரர் - தம்பதிகள்.
வன்மை - வலிமை.

வா

வானுற - ஆகாயம்வரை.

வி

விண் - ஆகாயம்.
விதண்டை - தன்மதத்தை ஸ்தாபித்துப் பேசுதல்.

வீ

வீறப்பு - இறுமாப்பு.

வே

வேட்ப - விரும்ப.

இந்நூலில் வந்துள்ள

## செய்யுட்களின் உரை.

"கோடி" என்னும் பாட்டு. பக்கம் - 2. ஔவை.

கோடிகொடுத்தும் - கோடிக்கணக்கான திரவியத்தைக் கொடுத்தாயினும்; குடிப்பிறந்தார் தம்மோடு - நற்குடியிற்பிறந்தவர்களோடு; கூடுதல் - சினேகித்தல்; கோடி பெறும் - கோடானுகோடிக்குச் சமானமாகும். (கோடியாவது, விலை மதித்தற்கரிய மாணிக்கம் முதலிய கற்கள் இருபது கொண்டது.)

"மனத்தான்" என்னும் பாட்டு. பக்கம் - 2. திருவள்ளுவர்.

மாந்தர்க்கு - மனிதர்க்கு; உணர்ச்சி - அறிவு; மனத்தான் ஆம் - தம்மனத்தினால் உண்டாகும்; இன்னான் எனப்படும் சொல்-இவன் இப்படிப்பட்டவனென்று உலகத்தாரால் சொல்லப்படுகிற சொல்லானது; இனத்தான் ஆம் - தான் சேர்ந்த இனத்தினாலுண்டாகும்.

" செவியில் " என்னும் பாட்டு. பக்கம் - 3. திருவள்ளுவர். இரண்டாமடி விடப்பட்டது.

'செவியால் (கேட்டு அநுபவிப்பதாகிய) ருசியை உணராது, வாயால் (தின்று அநுபவிப்பதாகிய) ருசியைமட்டுமுடைய அறிவற்றமனிதர்' என்பது இதன்பொருள்.

"அன்பிற்கு" என்னும் பாட்டு. பக்கம்-4. திருவள்ளுவர்.

அன்பிற்கும் - அன்பினுக்கும்; அடைக்கும் தாழ் - பிறரறியாமல் அடைத்துவைக்கும் தாழ்க்கோல்; உண்டோ - உளதோ; ஆர்வலர் - அன்புடையவர்களது; புன்கணீர் - (தம்மால் அன்புசெய்யப்பட்டவரது துன்பங்கண்டவிடத்து சொரிகின்ற) கண்ணீர்த்துளியே; பூசல் தரும் - (அன்பினை) வெளிக்காட்டும்.

"அருவினை" என்னும் பாட்டு. பக்கம்-5. திருவள்ளுவர்.

அருவினை என்ப - செய்தற்கரிய காரியங்கள் என்று சொல்லப்படுமவை; உளவோ - உண்டோ (இல்லை); கருவி யால் - தக்க சாதனங்களுடனே; காலம் அறிந்து செயின் - தக்க காலத்தைத் தெரிந்து செய்தால்.

"தன்னெஞ்சு" என்னும் பாட்டு. பக்கம்-8. திருவள்ளுவர்.

தன் நெஞ்சு அறிவது - (ஒருவன்) தன் மனம் அறிந்த ஒன்றை; பொய்யற்க - பொய்யாதொழியக்கடவன்; பொய் த்தபின் - பொய்த்தானாயின்; தன்நெஞ்சே - தனதுமனமே; தன்னை சுடும் - தன்னை வருத்தும்.

"ஏந்தெழின்" என்னும் பாட்டு. பக்கம்-15. தனிப்பாடல்.

ஏந்தெழில் மிக்கான் - சிறந்த அழகில்மிகுந்தவன்; இளை யான் - வாலிபன்; இசைவல்லான் - பாடல் வல்லவன்; காந் தையர் கண்கவர் - ஸ்திரீகள் கவனித்துப்பார்க்கும்படியான; நோக்கத்தான் - பார்வையை உடையவன்; வாய்ந்த நயன் உடை இன் சொல்லான் - நயம்பொருந்திய இனிய சொல் லுடையவன்.

"நங்கை" என்னும் பாட்டு. பக்கம் - 20. நூலாசிரியர்.

நங்கை டெஸ்டிமோனாவே நல்லவளென்றான்; அவள் என் தங்கையினும் அன்புடையாள்தான் என்றான்; மங்கை யாகிய அவள் நோயின்றி ஒரு நூற்றாண்டு வாழ்க, என்று; தீய - கெட்ட; ஒயின் - திராட்சரச சாராயத்தை; ஓய்வின்றிக் குடித்தான்.

"துஞ்சினார்" என்னும் பாட்டு. பக்கம்-20. திருவள்ளுவர்.

துஞ்சினார் - உறங்கினவர்; செத்தாரின் வேறல்லர் - (அச் சமயம்) அறிவில்லாமையால் செத்தவர்களுக்குச்சமானமா வார்; (அப்படியே) கள் உண்பவர் - கள்ளைக்குடிப்பவர்; எஞ் ஞான்றும் - எக்காலத்தும்; நஞ்சுண்பவர் - (அறிவை இழப்ப தால்) நஞ்சுண்பவர்களுக்கு ஒப்பாவார்.

"விண்சூழன்று" என்னும் பாட்டு. பக்கம்-20. தனிப் பாடல்.

கள் உண்டவர் விண் - ஆகாயம்; சுழன்று கீழே விழுகின்றதென்பார்; மண் சுழன்று; மேல்வவும் - (தங்களை உயரச் செலுத்தும்; என்பார்; கண்சுழன்று - (தங்கள்) கண் சுழல; சூரியனை; சோமன் - சந்திரன்; என்பார்; சொல்விளம்பி-கள்; செய்கின்ற காரியத்லை தயார் கண்டு உரைப்பார்.

"கேட்பார்" என்னும் பாட்டு. பக்கம்-25. திருவள்ளுவர்.

கேட்பார் - கேட்பவர்களை; பிணிக்கும் - வசப்படுத்தும்; தன்மையுடையனவாய்; கேளாரும் பகைவரும்; வேட்ப விரும்பிக் கேட்கும்படியாக; மொழிவதாம் சொல் - கூறுவதே சொல்லெனப்படும்.

T. 12865

'கேட்டார்ப்பிணிக்கும்' என்றும் பாடமுண்டு. கேளார் - என்பதற்குக் 'கவனித்துக் கேளாதவர்' என்றும் பொருள் கொள்ளலாம்.

"ஈக்கு" என்னும் பாட்டு. பக்கம்-30. மூதுரை.

ஈக்குவிடம் தலையில், எய்தும் - இருக்கும்; தேளுக்கு வாய்த்தவிடம் கொடுக்கில் வாழும்; நோக்கு அரிய பைங்கண் அரவுக்கு - கூரிய பார்வையுடைய பசுமையான கண்ணுள்ள பாம்புக்கு; விடம் பல்லளவே; துர்ச்சனருக்கு - தீயோருக்கு; அங்கம் முழுதும் விடமே ஆம் - உடம்பெல்லாம் விஷமே யாகும்.

" தற்காத்து " என்னும் பாட்டு. பக்கம் - 35. திருவள்ளுவர்.

தற்காத்து - (கற்புக்கெடாமல்) தன்னைக் காத்துக்கொண்டு; தற்கொண்டான்பேணி - தன்னை (மனைவியாகக்) கொண்ட கணவனை (உண்டி முதலியவற்றால்) உபசரித்து; தகைசான்ற - (தம் இருவரிடத்தும்) நன்மையமைந்த; சொல் காத்து - புகழைக் காப்பாற்றி; சோர்வு இலாள் - நற்குண நற்செய்கைகளில்) குறைவு இல்லாதவளே; பெண் - பெண்ணென்று சொல்லப்படுவாள்.

"பெண்ணின்" என்னும் பாட்டு. பக்கம்-36. திருவள்ளுவர்.

கற்பு என்னும் திண்மை - கற்பு எனப்படும் உறுதி; உண்டாகப்பெறின்-உண்டாயிருக்கப்பெற்ருல்; பெண்ணின்-மனையாளினும்; பெருந்தக்க - உயர்வான (பொருள்கள்); யாஉள - எவை இருக்கின்றன.

"பொய்யாமை" என்னும் பாட்டு. பக்கம்-36. திருவள்ளுவர்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - பொய் பேசாதிருத்தல் என்ற (ஒன்றையே ஒருவன்) செய்துவருவானுயின்; பிற அறம் - வேறுதருமம் (ஒன்றும்) செய்யாமை செய்யாமை நன்று - செய்யாது செய்யாது இருத்தலும் நல்லதே.

"தேரையார்" என வருவது. பக்கம் - 38.

இதன்பொருளாவது:—செவ்விளநீர்த் தேங்காயின்மீது தேரைவந்தமர்ந்தவுடன் அதிலுள்ள நீர் வற்றிவிடும். அதனுல் அந்தத் தேரையே அவ்விளநீரை உண்டதாக மனிதர்கள் கூறுவார்கள். உண்மையில் அது உண்ணுதிருந்தும் இந்தப் பழிச் சொல்லுக்காளாகும்.

"காலையிலும்" என்னும் பாட்டு. பக்கம்-38. தனிப்பாடல்; கடையிரண்டடி திருவள்ளுவர்குறள்.

காகம் காலையிலும் மாலையிலும் குளித்து; வஞ்சவேலையிலும் - வஞ்சனையான வேலைகளிலும்; மிக்கு விளங்கும்; (அதுபோல) நீலமனத்தது - (தமது) கரிய மனத்திலுள்ளது; மாசு ஆக - குற்றமாகவும்; மாண்டார் - தவமாட்சி யுடையவர்கள் போல; நீராடி - ஸ்நானம்முதலிய செய்து; மறைந்து ஒழுகும்- மறைவாகத் தீய ஒழுக்கத்தில் ஒழுகும்; மாந்தர் பலர் - மனிதர்கள் (உலகத்தில்) அநேகர்.

"நல்லருணை" என்னும் பாட்டு. பக்கம்-38. தனிப்பாடல்.

நல் அருணை வாழ்நாதர் - நல்ல திருவருணை என்னும் ஸ்தலத்தில் வாழுங்கடவுள் நம்மை வருத்துவது, கொல்லவா?

(அல்ல); பொல்லாக்குணம்போக-நமது தீய குணங்கள் மாறும் பொருட்டேயாகும்; (எதுபோலவென்றால்) வண்ணான் கூறை தனை கல்லின் மழுக்குவது, (அதை) மாற்றவா? (அல்ல); அது-அவ்விதஞ்செய்வது; அழுக்குவாங்கைக்காம் - அழுக்குப்போக்குவதற்காம்; (அதுபோலவாகும்.)

"எண்ணி" என்னும பாட்டு. பக்கம்-41. திருவள்ளுவர்.

கருமம் - (ஒரு) காரியத்தை; எண்ணி - ஆலோசித்து; துணிக - (பிறகு அதைச் செய்வதற்கு) நிச்சயப்படுத்து; துணிந்தபின் - நிச்சயித்தானபிறகு; எண்ணுவம் என்பது - யோசித்துக்கொள்வோமென்பது; இழுக்கு - குற்றம்.

"ஒதேல்லோ" என்னும் பாட்டு. பக்கம்-42. நூலாசிரியர்.

முதலிரண்டடி பொருள் வெளி. கடை இரண்டடி குறள்; பொருள் முன்னமேயே கூறப்பட்டுள்ளது.

"மாந்தர்கள்" என்னும்பாட்டு. பக்கம்-42. நூலாசிரியர்.

முதலிரண்டி பொருள்வெளி. கடை இரண்டடி திருவள்ளுவர் குறள். பொருள்வருமாறு:— மனை - மனையாளது; மாட்சி - நற்குண நற்செய்கைகளை; மங்கலம் என்ப - (குடும்பத்திற்கு) நன்மை என்று சொல்லுவார்கள்; நன்மக்கட்பேறு நல்லபுதல்வர்களைப் பெறுதலை; அதன் நன்கலன் - அக்குடும்பத்திற்கு நல்ல ஆபரண மென்று சொல்லுவார்கள்.